வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

உ

சிவமயம்

# இந்து சாதனம்

# HINDU ORGAN

சைவ பரிபாலன சபை வெளியீடு

பிரதி விலை சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28-ம உ  அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.  தொலைபேசி: 356

புத்- அகூ]  யாழ்ப்பாணம்:- பிங்கள ஞு வைகாசி மீ கச - உ  வெள்ளிக்கிழமை (27 - 5 - 1977)  [இல: அ

## சிதம்பரம் சேக்கிழார் திருக்கோயிலிற் குருபூசைப் பெருவிழா

[எமது சிதம்பரம் சிறப்பு நிருபர் திரு. மா. பாலசுப்பிரமணியன்]

சிதம்பரத்திலுள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் உயர்நிலைப் பள்ளியின் அறநிலையத்தைச் சேர்ந்துள்ள ஸ்ரீ சேக்கிழார் திருக்கோயிலில் (ஞானப்பிரகாச குளம் வட கரையிலுள்ளது) அறநிலைய நற்பொறுப்பாளர் உயர்திரு. கி. க இராசேசுவரன் அவர்கள் மே திங்கள் 22, 3', 24 மூன்று தேதிகளிலும், ஸ்ரீ தெய்வீக சேக்கிழார் பெருமானின் குருபூசைத் திருவிழாவைச சிறப்பாகநடாத்தி வைத்தார்.

22 ஆம் நாள் காலை கோயிலின் பூஜகர் திருவாளர் திருஞானசம்பந்த தேசிகர் ஸ்ரீ தெய்வீக சேக்கிழார் பெருமானுக்கு விசேட அபிடேகம் நடத்தி திருநீற்றுக் கவசம் அணிவித்து ஆராதனைகள் செய்து அனைவருக்கும் திருநீற்றுப்பிரசாதம் வழங்கினர்.

மாலையில் முதுபெரும் புலவர் திருவாளர் பி. ஆர் சுவாமிநாத முதலியார் அவர்கள் தலைமை தாங்கி விழாவை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்துகையில் தெய்வீக சேக்கிழார் பெருமான் திருமுறைகளை நன்கு உணர்ந்து கருத்துக்களை நன்கு அறிந்துகொ

(வளர்ச்சி 2 - ஆம் பக்கம்)

### மணவாளக்கோலத் திருவிழா

நல்லூர் நாயன்மார்கட்டு ஸ்ரீ வெயிலுகந்த விநாயகர் தேவஸ்தான மணவாளக்கோலத் திருவிழா (6-6-77) திங்கட்கிழமை நிகழும். அன்று ஸ்ரீ சண்டேசுவரர் பிரதிட்டையும் விசேட அபிடேகமும் இரவு திருவிழாவும் நிகழும்.

### இந்திய யாத்திரை

ஆனி மீ - 1977

அகில இலங்கை இந்து மாமன்றம் ஆனி 23 ந் உ சிதம்பரத்தில்நடைபெறும் ஆனி உத்திர தரிசனம் காணவும், ஏனைய ஆலயங்களைத் தரிசிக்கவும் 54 யாத்திரிகர்கட்கு வெளிநாட்டுச் செலாவணியும் கப்பல் - புகையிரத மார்க்கமாகச் சென்று திரும்ப வசதியும் தரப்படும் அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றுள்ளது.

16-5-77 வரை மாமன்றத்தினுல் ஏற்றுக்கொள்ளப்பட்டவிண்ணப்பங்களை உப குழு ஆராய்ந்து தகுதி வாய்ந்தவர்களை வயதுக்கேற்ப நிரற்படுத்தித் தெரிவு செய்துள்ளனர்.

தெரிவு செய்யப்பெற்றவர்களுக்கு அனுமதி வழங்கற் கடிதங்களும கொடுக்கப்பட்டுள்ளன யாத்திரிகர்கள் தாமாகவே பிரயாண ஒழுங்குகளையும ஏனைய தேவைகளையும செய்து 17-6-77 க்குமுன் செலாவணி அனுமதியைப் பெற்று 30-6-77 க்குமுன் பிரயாணம் செயயும்படி மாமன்றத்தினுற் கேட்டுக கொள்ளப்பட்டுள்ளனர்.

இது அரசாங்கத்தினுல் அளிக்கப்பட்ட இரண்டாவது அனுமதியென்பது குறிப்பிடத் தக்கது.

இந்துமாமன்றத்து இந்தப் பணி பாராட்டுக்குரியது.

### திருமுறைமீது மேதினி மிதந்தது !

"இறை — ஒளி"

தோணிபுரக் கோபுரத்துத் தோன்ற தோடுசெவி
வாணியருள் வாய்க்க மழலைச்சொற் – பாணியென
அம்மேஅப் பாவெனும் அவ்வொலி பூநிருவ
இம்மா நிலமுய்ந்த தே.

கள்ளங் கபடமோ காணுக் கவுணியக் கண்மணியின்
உள்ளங் கவர்கள்வன் ஊழி கடந்த ஒருவனுப
வள்ளல் வழங்கு வரப்கா னமதாய் வருமிசைத்தேன்
வெள்ளத் திருமுறை மீது மிதந்தது மேதினியே.

## தத்தம் அமைப்பே அமைவதாக அரற்றி மலைகின்றனர் ……?

பொதுத் தேர்தலிற் புதுப் பார்வை ஒன்று காணக்கூடியதாயிருக்கின்றது.

சமய வாதிகள் தத்தம் மதங்களே அமைவதாக அரற்றி மலைந்தனர் என்று அன்று மணிவாசகப் பெருந்தகை நன்றுரைத்தார். இந்த மலைவு சமயத்தோடு நிற்கவில்லை என்பதைப் பொதுத் தேர்தல்கள் புலப்படுத்துவது சகசம்.

இந்தியாவில் இந்த மலைப்பு இப்பொழுது சர்வ சாதாரணமாய்விட்டது.

ஈழத்திலும் அந்தத் தாளத்தைத்தான் அரசியல் வாதிகள் போடுகின்றனர்! தாளந் தெரியாதவர்கள்கூடத் தாளம் போடுகின்றனர். சிலர் திருகுதாளம் போடுகின்றனர்.

புதுப் புதுப் பெயர்களிற் பொதுத் தேர்தற் கட்சிகள் தோன்றுகின்றன. எல்லோரும் இறுமாப்பில் மலைகின்றனர்,

## குஞ்சிதபாதத்தைக் கும்பிடும் உயர் நெறி

### சிவனடிப் பெருமையைச் சிந்தித்தல் தவமுறை

[அ. இ. சேக்கிழார் மன்ற ஆதரவில் யாழ். இந்துமகளிர் கல்லூரியில் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு செ. வைத்தியலிங்கம் M. A. M. Lit அவர்கள் "திருவடிப் பெருமை" எனும் பொருள்பற்றி ஆற்றிய விரிவுரைச் சுருக்கம்]

[தொகுப்பு ; சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை]

சைவ - வைஷ்ணவ அடியார்கள் இறைவன் திருவடிப் பெருமையையும் அருமையையும் பெரிதும் போற்றியுள்ளனர் தம் அருட் பாடல்களால் எம்மையும் அத்திருவடிப் பெருமையைச் சிந்திக்கச் செய்யத் திருவடிப் பேற்றை அடையும்படி வழிகாட்டிச் சென்றுள்ளனர். திருவடிப் பெருமையைச் சிந்திப்பது மாத்திரமன்றி அவர்கள் காட்டிய வழியில் ஒழுகிச் செல்வது சைவச் சான்றோர் கடன்.

வைஷ்ணவ சமயத்தின் ஆழ்வார்கள் இறைவன் கல்யாண குணங்களிலே ஆழ்ந்து பக்தி செலுத்தி அருள் பெற்றதனுல் 'ஆழ்வார்கள்' என்று சிறப்புப் பெற்றனர், அவர்களுள் தொண்டரடிப் பொடியாழ்வார் ஒருவர் தொண்டர் அடியின் பெருமையைத் தமக்கு அணிகலமாகக் கொண்டவர். திருவடிப் பூதியைச் செல்வமாகக் கருதியமையால் அப் பெயர் பெற்று விளங்கியவர், திருவேங்கடத்தான் திருக்கோயிலின் படியாகக் கிடக்கத் திருவேங்கடத்தானை வேண்டியவர் குலசேகர ஆழ்வார், கோயிற் படியாகக் கிடந்தால் பெருமான் அடியவர்களின் திருப்பாதம் படும் வாய்ப்புக் கிடைக்கும் என்று வாயூறியவர். அதனுல் ஆண்டவனின் அடியார்களின் திருவடிகள் அவ்விறைவன் திருவடிகளே என உணர்த்தாமல் உணர்த்தியவர்கள். இன்னொரு வகையால் சொன்னுல் அவ் வாச்சாரியர்கள் அவ்வாண்டவனே என்பதை உணர்

(வளர்ச்சி 2-ம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே,
திருச்சிற்றம்பலம்

# இந்து சாதனம்

பிங்கள ஹூ வைகாசி மீ கசு - உ வெள்ளி

## அழுது தொழுத அடியார் அடிச் சுவட்டில்:

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் செ. வைத்தியலிங்கம் அவர்கள் எங்கள் சபை ஆதரவில் "அழுதால் உன்னைப் பெறலாமே" என்ற மணிவாசகப் பொருள்பற்றிச் சொற்பெருக்காற்றுகையிற் பலப் பல பொருத்தமான கருத்துக்களை எடுத்தாண்டு சைவ சமயிகள் தொழும்பொழுதெல்லாம் உளங் கசிந் துருகிக் கண்ணீர் மல்க அரனை இதயத் தமைக்கும் சால்புடையவர்கள் என்று அமைவாகத் தொடுத்துக் காட்டினர்.

அந்த அரிய சொற்பொழிவின்கண் சன சமூதாயத்துக்கு நல்லதோர் மதிமொழியைச் சொல்லி வைத்தமை ஈண்டு குறிப்பிடத் தக்கது. சும்மா இருக்கும் திறமரிது என்ற அரிய தத்துவக் கருத்தை அழகாக எடுத்தாண்ட மகா ஞானி தாயுமான சுவாமிகள் நெஞ்சை உருக வைக்கும் நீர்மையதாகப் பாடிய,

"எத்தனைவிதங்கடான் கற்கினுங்கேட்கினுமெ ன்
னிதயமுமொடுங்கவில்லை
யானெனு மகந்தைதா னெள்ளளவு மாறவில்லை
டாதினும் மபிமானமென்
சித்தமிசைகுடிகொண்ட தீமையொடிரக்கமென்
பசன்மத்துநானறிகிலேன்
சீலமொடுதவவிரத மொருசனவிலாயினுந்
தெரிசனங்கண்டுமறியேன்
பொய்த்தமொழியல்லால் மருந்துக்குமெய்ம்மொழி
புகன்றிடேன் பிறர் கேட்கவே
போதிப்பதல்லாது சும்மாவிருந்தருள்
பொருந்திடாப் பேதைநானே"
பத்தனெனுமகசேடர் கண்டதாக்கேட்டதா
வடனிமிஷச யுண்டோசொலாய்
அண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகி
யானந்தமான பரமே.

எனுஞ் செய்யுள் திகழ்த்தும் உட்பொருளை அணிபெற விளக்கிய பேராசிரியர் சமூகம், மேற் கூறப்பட்ட தவறுகள் உடையதாயும் அவற்றை நீக்கி இருள் நீங்கப்பெற இறைவனை நெறியாக வாழ்ந்து வணங்கியுய்தல் வேண்டும் எனவும் இடித்துரைத்தமை சிந்தனைக்கு மட்டுமல்லச் செயலாற்றப்பட வேண்டியதுமாகும்.

பொய்த்த மொழியல்லால் மருந்துக்கும் மெய்யுரையாத சமூகம் என்று தன் மேற் பழியைச் சுமத்திய சுவாமிகள் உண்மை நெறி ஒழுக்கத்தின் உயர்வையும் இன்றியமையாமையையும் அழுத்தி உரைத்து நாமெல்லோரும் நல்வழி வாழச் சொல்லிய புத்தியுரை மீண்டும் மீண்டும் சிந்திக்கப்பட வேண்டியதொன்றென்று பேராசிரியர் ஆராய்ந்து காட்டிய பொருட் பொலிவை மக்கள் கருத்திற் கொள்ளுதலே சமயப் பயிற்சியாகும்.

## சிதம்பரம் சேக்கிழார் திருக்கோயிலில்

[1 - ஆம் பக்கத்து வளர்ச்சி]

ண்டு, எல்லா இடங்களுக்கும் சென்று பார்வையிட்டு வரலாறுகளைத் தெரிந்துகொண்டு வந்து, தில்லையம் பதியில் ஸ்ரீ நடராசப் பெருமான் "உலகெலாம்" என்று அடி எடுத்துக் கொடுக்க "திருத்தொண்டர் புராணம்" இயற்றியுள்ளார் என்றும், பேராசிரியர் இராஜ மாணிக்கனார் அவர்கள் எழுதியுள்ள பெரிய புராண விளக்கத்திற்கு திரு. வி. கல்யாண சுந்தர முதலியார் அவர்கள் வழங்கியுள்ள பாராட்டுரையில், சேக்கிழார் ஓர் பல்கலைக் கழகம் போன்றவர் என்றும் கூறியுள்ளார்கள் என வியந்தனர்.

மதுரை திரு. பி. மீனாட்சிசுந்தரம் குழுவினரின் வீணைக் கச்சேரியும், திரு. எஸ், கிருஷ்ணமூர்த்திக் குழுவினரின் இன்னிசை அரங்கும் நடைபெற்றன

23 ஆம் நாள் காலை குருபூஜை விழா நடைபெற்றது. கோயில் பூஜகர் சேக்கிழார் பெருமானுக்கு விசேட அபடேகம் செய்து சந்தன அங்கி அலங்காரம் செய்து ஆராதனைகள் நடத்தி எல்லோருக்கும் திருநீற்றுப் பிரசாதம் வழங்கினர்.

நாவலர் சித்தாந்தக் கல்லூரி ஆசிரியர் திரு. ஆளவந்தார் சேக்கிழார் பெரிய புராணம் ஓர் புரட்சி நூல் என்று எடுத்துக் காட்டினர்.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியரும் சித்தாந்தப் பெரும்புலவருமான திருவாளர் மு. சுந்தரேசம்பிள்ளை அவர்கள் 2-ஆவது நாள் குருபூஜை விழாவன்று மாலை தலைமை வகித்துத் தலைமையுரை கூறுகையில் தெய்வீக சேக்கிழார் பெருமான் தில்லையம்பதியில் ஸ்ரீ நடராஜப்பெருமான் அடி எடுத்துக் கொடுக்கத் தொடாங்க திருத்தொண்டர் புராணத்தின் முதல் பாடலான "உலகெலாம்" என்ற

[வளர்ச்சி 4-ஆம் பக்கம்]

## சமயக் கல்வியின் பயன்

திரு. மு இளையதம்பி B. A.

சமயம் என்பது சிறந்த கொள்கைகளை அடிப்படையாகவுள்ள வழியாகும். அது கடவுளிடம் கொண்டு செல்லும் வழி. நிலையானது யாது என்றும், நிலையற்றவை யாவை என்றும் கூறி அழிவில்லாத பேரின்பத்தை ஈற்றில் அடையத் துணை புரிகிறது எல்லாப் பிறவிகளுள்ளும் மனிதப் பிறவி சிறந்தது. கல்வி கற்று அறிவைத் தேடவும் இறைவனைப் பற்றிச் சிந்திக்கவும் மனிதனைவிடக் கீழ்ப் பிறவிகள் ஒன்றினாலும் இயலாது.

வீட்டிலுள்ள நோயாளி ஒருவருக்கு மருந்து வாங்கச் சென்றவர் வழியிலே சால வித்தை காட்டுபவனின் வித்தைகளைக் கண்டு அதில் மனத்தைச் செலுத்தி மருந்து வாங்குவதை மறந்து வீடு திரும்பினால் அவர் போன நோக்கத்தினின்று தவறியவராவார். அதுபோன்று முத்திப் பேற்றை அடைவதற்குப் பிறவி எடுத்த மனிதன் பிரபஞ்ச வாழ்க்கையில் அகப்பட்டுத் தான் வந்த நோக்கத்தை மறந்து இறக்க நேரிட்டால் அவன மிருகங்களுக்கு ஒப்பாவான். பாசத்தினின்று அமிழ்ந்து போகாது, விழுமிய பொருளைப் பற்றிச் சிந்திக்கச் செய்வது சமயக் கல்வியாகும்.

சமயக் கல்வி கற்பதால் மாணவர்கள் அடையும் பயன்கள் பலவுள; அது நல்லொழுக்கத்துக்கு வித்திடுகிறது. தூய மனப்பான்மையை உண்டுபண்ணுகிறது, குருபத்தியின் விசேடத்தையும் தெய்வ பக்தியின் அவசியத்தையும்வற்புறுத்துகிறது அழுக்காறு அவா, வெகுளிகளால் ஏற்படக்கூடிய தீமைகளைக் களைந்துவிடத் துணை புரிகிறது. புலால் உண்ணல் மதுபானம் அருந்தல் ஆகியன விலக்க வேண்டியன என்பதை அது விளக்குகிறது. இரக்கம், அன்பு, பக்தி போன்ற சிறந்த குணங்களைப்பற்றி அது போதிக்கின்றது. அது மிருககுணங்களை வென்று மனித குணங்களைக் கடைப்பிடித்தொழுக வழிகாட்டுகின்றது, பாவங்களை அறவே ஒழிக்க வல்லவன் இறைவன் என்பதை உணர்த்துகிறது. ஞானசம்பந்தர்,

'முற்றுவெண் திங்கள்
முதல்வன் பாதமே
பற்று நின்றாரைப்
பற்று பாவமே'

என்று கூறுவதைக் கவனிக்கலாம்.

மாணவர்களுககு வாழ்க்கைக்குரிய ஊதியத்தை மாத்திரம் பெற்றுக்கொள்ளக்கூடிய நோக்கத்தையுடைய கல்வி போதுமானதல்ல. அவர்கள் சத்தியம், அகிம்சை, அன்பு பக்தி. இறை வழிபாடு அறம், தன்னுயிர்போல் மன்னுயிரைப் பேணும் மனப்பான்மை, பொய் சொல்லாமை, ஆகிய மேலான குணங்களைப் பழகி ஒழுக்கமுள்ள மேன் மக்களாகவும் பண்புடையோராகவும் குடும்பத்துக்கும் நாட்டுக்கும் பயன் செய்பவர்களாகவும் வாழ வேண்டும. தற்காலத்தில் பாடசாலைகளிலும் சர்வ கலாசாலைகளிலும் இடையிடையேதோன்றும் ஒழுங்கீனங்கள் வருந்தத் தககவை. விழுமிய பண்பாடுடையவர்களாகத் திகழச் சமயக் கல்வி உதவி புரிய வேண்டும்.

'மகன் தந்தைக்கு ஆற்றும்
உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல்எனுஞ்
சொல'

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாய்மொழிக் கிணங்க பிள்ளைகளின் சீரிய ஒழுக்கத்தைக் கண்டு பெற்றோரும் மற்றோரும் பெருமையடையவேண்டும்;

சைவ சமயத்தைப்பற்றிக் கற்கும் பிள்ளைகள் நாவலரின் சைவ வினா விடைகளைக் கற்பதனால் சைவ சமயத்தின் மகத்துவத்தைப்பற்றிஅறிவதோடு சமயாசாரம், கோயில் வழிபாட்டின் முக்கியத்துவம், நித்தியம் அனுஷ்டிக்கவேண்டிய சைவ ஒழுக்க முறைகள் அவைகளால் அடையக்கூடிய ஆன்மலாபம் என்பவற்றை அறிந்துகொள்ள முடியும்,

ஒருவர் எவ்விதக் கல்வித் துறையில் பயின்றும் எக் கல்விக்கும் அடிப்படையான சமயக் கல்வியைப் பயிலாதவராயின் அக்கல்வி அவருக்கு மேலான பயனைக் கொடுக்குமென நாம் நம்ப முடியாது.

"கற்றதனால் ஆய
பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்'

என்ற வள்ளுவர் வாக்குச் சிந்திக்கற்பாலது.

## குஞ்சிதபாதத்தை

(1. ஆம் பக்கத்து வளர்ச்சி

க்துகின்றார்,

சைவசமயத்திலே இறைவன் திருவுருவைக்கோயில்களிற் பல்வேறு வடிவினதாகக் காணலாம். அருவம், உருவம் அருவுருவம் என்னும் மூவகைத் திருமேனிகளும் இறைவனுக்குச் சொல்லப்பட்டவை. இவைகள்கோயிலில் விளங்குவதை நாம் உணர்ந்து கொள்ளலாம். கோயில் என்று சிறப்பாக எடுத்தியம்பும் சிதம்பரத்திலே அருவமாக விளங்குவது சிதம்பர ரகசியம். உருவமாக விளங்குவது நடராசப் பெருமான் திருவுருவம். அருவுருவமாகவிளங்குவது மகாலிங்கம்.

உருவமாக விளங்கும் நடராசப் பெருமான் திருவுருவம் நம் முன்னோர் கண்ட அருட்டிருமேனி. அவனியெலாம் போற்றும் அருட்டிருவுரு. காலம் காலமாக மெய்யடியார்கள் போற்றிப் பரவிச் சிந்தித்த திருவுரு. அத் திவ்விய திருவுருவிலே ஊன்றிய திருவடி திரோதானம். தூக்கிய திருவடி குஞ்சித பாதம். நடராசப் பெருமான் திருவுரு திருவருட் செல்வர்களுக்குச் சிந்திக்கச் சிந்திககத் தெவிட்டாத ஞான வுரு, அருட் கண்ணால் நோக்காது கலைக்கண் கொண்டு பார்ப்பவர்க்கும் சிந்தனைக் கருவூலம். நடராசப் பெருமான் திருவுரு பல கோயில்களிலே காணப்படுமாயினும் அவ்வுருவில் மூர்த்தி விசேடம் அமைந்துள்ளதா என்று பார்ப்பதற்குச் சிற்ப சாஸ்திர முறைப்படி ஒரு நுண்ணிய இரகசியத்தை அத்துறை வல்லோர் குறிப்பர். நடராசர் திருவுருவின் திருநெற்றி மையத்திலே ஒரு துளி தேனை விடின்

வளர்ச்சி 3 - ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய பாணியா? புதியதா?

## பாட்டு இரசிப்பவர் பக்குவம் என்ன?

சங்கீத முறையிற் பயின் றவர்களின் இன்னிசையைக் கேட்கும் இன்பம் இன்பம் என்ன!

நம் கீதம் என்று நாடோடியாக நடைபெறும் துள்ளிசையாய் அனுபவிக்கும் துன்பம் என்ன! என்ற அளவில் இக்காலத்தில் இசை நிகழ்ச்சிகளில் விபரீதமெழுவது நூதனமல்ல!

அமெரிக்காவிலே இப்பொழுது புதியதா பழையதா உகந்தது? என்று கருத்தரங்கு நடைபெறுகின்றதாம். வாசிங்ரன் நகரிலே தேசிய இன்னிசை

---

## கோட்டு விற்பனவு விளம்பரம

மல்லாகம் டிஸ்திறிக்கோட்டில்

கருகம்பானை 1. ஆறுமுகம் நாலிங்கம்
2, பெண் சொர்ணநாயகம் — வழக்காளிகள்
இல, ஈடு 1096 எதிராக
மைலிட்டி நல்லதம்பி துரையப்பா - எதிராளி

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு 1096 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைபபடி பின்னால் விபரிக்கப் படும் ஒரு துண்டுக் காணியை 1977 - ம் ஹூ ஆனி மீ 28 ம் (28-6-77) முற் பகல் 10 - 30 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில விற்கப்படும.

தீர்வைத் தொகை முதல் வட்டி ரூபா 14160/— இன்னும் ரூபா 8000/- த்துக்கு 1-3-76 தொடக்கம் 4-6-76 வரைக்கும 14 வீத வட்டியும் அதன் மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலரு ரூபா 651 - 47 சதம்.

### ஆதன இடாப்பு

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டி கோயிற்பற்று பலாலியிறை வெட்டுக்காடு' நில பரப்பு 195 பனைகள் தென்னைகள் கிணறும் எல்லை கிழக்கு பிலிப்பன் வெலிச்சோருக்கும், வயித்தி பெண் தேரேசாவுக்கும் உரிய ஆதனங்கள் வடக்கு கடல் மேற்கு வெள்ளவாய்க்காலும் வல்லிபுரம் இராமசாமிக்கும் பெண் தங்கரத்தினத்திற்கும் உரியஆதனம. தெற்கு ரோட்டும் தமியாம்பிள்ளை சவரிமுசதுவுக்கும் உரிய ஆதனம். இதில் சொரியலாய் நில பாப்பு 59 ஐம்பத்தொன்பதும குளி பன்னிரண்டேகாலும 12¼ கல் வீடும் கிணறும் நிந்தமாகவும் இதில் சொரியலாய் (½) காற் பங்கும் அதற்குரியவைகளும.

செ. விசாகரத்தினம்,
133 பருத்தித்துறை ரோட் விற்பனவு ஆணையாளர்,
நல்லூர் யாழ்ப்பாணம் 1-6-77 23 27 5

---

## ஈட்டுவழக்கில் விற்பனவு அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்
இல. ஈடு 441
ஐயாத்துரை தேவநாயகம் — ஏழாலை
எதிராக வாதி.
1. கதிரித்தம்பி செல்வராசாவும் பெண்
2. புவனேஸ்வரியும்—ஏழாலை பிரதிவாதி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்த்த தீர்வைப் படியும் குறித்த கோட்டால் எனக்குக்கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப் படும் ஆதனம் 1977 ம் ஆண்டு ஆனி மாதம் 27 ந் திகதி (27-6-77) திங்கட் கிழமை முங்பகல் 11 மணியளவில் குறித்த ஆதனத்தில் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும,

மேற் குறித்த பிரதிவாதி குறித்த வாதிக்கு ரூபா 4073 உம் மேலும் ரூபா 2500 வருடமொன்றுகு நூற்றுக்கு 10 வட்டி வீதம் வழக்கு அனைத்த திகதியாகிய 1974 ம ஆண்டு கார்த்திகை மாதம் 28 ம திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1975 ம் ஆண்டு ஆடி மாதம் 25 ம் திகதிவரையுமான வட்டியும் அதன் தீர்வை முழுத்தொகைக்கும இறுக்கப்படும்வரை சட்ட வட்டியுமான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்கு செலவு ரூபா 468 - 72/- (இதில் நடைபெற்ற செலவு ரூபா 260-35 நடைபெற வேண்டிய செலவு ரூபா 112 25 மேலதிக சமப சமயச் செலவு 95 57 2/1 சதம் கொடுக்க வேண்டியிருப்பதாலும் வழக்குச் செலவு தொகையில் கொடுக்கப்பட்ட ரூபா 150 கழிபடவேண்டும,

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோவிற்பற்று ஏழாலை இறை ஆத்தியடியுப காததி தறையும் நி-ப 5 குழி 1¾ கிழக்கெல்லையில நிற்கும வேமபிற் பங்கும் கிணற்றிற் பங்கும செய்பயிர் வாண்பயிர்கள் வாய்க்கால் வழியும் எல்லை கிழக்கு ஒழுங்கை சின்னத்தம்பி கைம் பெண் வள்ளிப்பிள்ளைக்கும விசுவா சபாபதிககும பங்காளருக்கும் உரிய ஆதனம் வடக்கு ஒழுங்கை மேற்கு வைத்திலிங்கம் கனகரத்தினத்துக்கும் உரிய காணி, தெற்கு செல்லையா கனகரத்தினத்துக்கு உரிய காணி- இவ்வெல்லைப் படி இதடங்கலும்.

கா. முத்துக்குமாரு ஐயர்
சந்நிதிவேல் ஏலவிற்பனையாளரும்
பருத்தித்துறை விலைமதிப்பாளரும்
16.5.77 19, 20,5.

---

### புராணபடனம்

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவிலில் தினமும் கந்தபுராணம் படித்துப் பயன் கூறப்பட்டு வருகின்றது. புராண விரிவுரையாளர் புலவர் சி. சின்னையா சைவப் புலவர் கு. வி, மகாலிங்கம், திரு, கி. குலரத்தினம் சங்கற்ப புத்தகப் படிப்பாளர்கள் மூன்றுமாத காலத்தில் வள்ளியம்மை படிப்பு (பூர்த்தி) நடக்கும்.

---

வாத்தியக்காரர் மேடையினர் 1977 - 78 ப் போகத்திற்குத் தமது நிகழ்ச்சி நிரலை வெளிப் படுத்தியபொழுது சங்கீத கண்டனக்காரர் பழக்ய பழையனவே கூடுதலாக இருப்பதுகூடாதென் றும் தற் காலப் படைப்பு மேலாக வேண்டுமென்றும் கருத் துரைத்தனரென்று அறியக்கிடக் கின்றது. இந்த நிலைக்குச் சங் கீதகாரரா இரசிப்பவர்களா காரணர் என்ற விவாதம் நடைபெறு கின்றது. ——

### சமய தீட்சை

கொழும்பு விவேகானந்த சபை ஆதரவில் 5-6 77 ஞாயிற்றுக்கிழமை காலை சமய தீட்சை நடைபெறவுள்ளது சபைப் பிரார்த்தனை மண்டபத்தில் சபைத் தலைவர் திரு. இரா, சபாநாயகம் அவர்கள்தலைமையில் வேதாரணியம சிவஸ்ரீ மு. நடராசக் குருக்கள அவர்கள் தீட்சை மந்திரோபதேசம் செய்துவைப் பார்கள்,

### திருஞானசம்பந்தர் குருபூசை

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் குருபூசைவிழா வைகாசி மாதம 22-ஆம் நாள் (4-6-77) மாலை 6 மணியளவில் கொழும்பு விவேகானந்தசபை ஆதரவில் சபைப் பிரார்த்தனை மண்டபத்தில் நிகழும்.

x x x

### சபை ஆதரவில்

சைவ பரிபாலன சபை ஆதரவில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் திருஞான சப்பந்தர் குருபூசை வழமைபோல நடைபெறும்.

---

### .... மதி வேண்டும்!



பத்தர்: " அச்சமின்றிப் பொய் சொல் "
" ஆரைக் கண்டாலும் தலை யாட்டு "

என்று யாரோ புதுக்கவிஞரொருவர் பாடினராம்! அரசியற் சூறவளி வீசப் போகிறகாலம; அட்டாவதானமா யிருக்கவேணும்.

சித்தர்: " வேட்பாளர்களென்ன ஆதரவாளர்களென்ன! படும்பாடோ பெரும்பாடு!! அம்ம!
" சொல்லுவார் சொன்னாலும் கேட்பார்க்கு மதியென்ன ......
......."

—" நாயன்மார் - நாதன் "

---

### ஆதிகாலத்து முறை

(முன் வளர்ச்சி -- 3)

மறுநாள் காலையில் அந்தச் சாம்பலை (பஸ்பத்தை) எடுத்து வடிகட்டிச் சுத்தம் செய்து ஈசுவர பூசை செய்து எல்லோருக்கும் அளிக்கலாம்.

இம் முறை திருநீற்றின் உண்மை தத்துவ விளக்கம் மூதல் நடு சுள்ளியானது ஆதியும் சர்வத்திற்கும் காரணமுமான பரப்பிரம்மமாகவும். மூன்று சுள்ளிகள் மும்மூர்த்திகளாகவும், ஐந்து சுள்ளிகள் பஞ்சகிருத்யமாகவும், மற்றச் சுள்ளிகள் சிவநாமங்களாகவும், புஷ்பம் பத்திரங்கள் சிவநாம அர்ச்சனையாகவும், அக்கினியை ஞானக்கினியாகவும்பாவனைசெய்வதாகும் தரையில் கட்டைகளால் வேள்வி செய்வதும் மேற் கண்டுள்ள முறைப்படியே செய்ய வேண்டும் இம் முறைப்படி ஆக்கப்படும் திருநீறு பல் பிணிகளையும் ஓட்டிச் சித்தி பலவும் நல்கும் என்பது ஆன்றோர் முடிபு.

(எமது சிதம்பரம் நிருபர் திரு. மா, பாலசுப்பிரமணியம்)

---

### குஞ்சிதபாதத்தை

(2 ம் பக்கத்து வளர்ச்சி)

அத்துளி அங்கிருந்து மூக்கு வழியாகச் சிக்கென வீசு கரத்தின் வழி வந்து அக்கரம சுட்டிக் காட்டும் குஞ்சித பாதத்தில் விழுந்தால் அம் மூர்த்தி சர்வ இலக்கணமும் அமையப்பெறுறதென்பர்.

இத்தகைய திவ்விய திருவுருவின் குஞ்சிதபாதமே எமக்கு இன்பத்தை அளிப்பது, அத்திருவடியின்கீழ் 'வருக' என்று எம் பெருமானே தன் வீசிய திருக்கரத்தால் சுட்டிக் காட்டும் குறிப்பு அனுபவத்தில் உணரவேண்டியது, "முத்தி நான்ற மலர்ப்பதத்தே நாடு" என்ற சாத்திர நூற் கருத்தும கருதத் தக்கது.

இன்று நேற்றல்ல பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எம் முன்னோர் இறைவன் திருவடிப் பெருமையை உணர்த்தியுள்ளனர், "நீலமேனி வாரிழை பாகத் தொருவன்" என்னும் சங்கச் செய்யுள் அவ்விறைவன் திருவடியைப் போற்றுகின்றது, தமிழ் மறை எனப் பேசப்படும் திருக்குறள் "நற்றாள்" தொழுதலை முதலிலேயே சுட்டியுள்ளது

நாம் உய்தி பெறத் திருவவதாரம் செய்து, தெய்வத் திருமுறைகள் அருளிச் செய்த பெரியோர்கள் ஆங்காங்கே எமக்குத் திருவடிப் பெருமையை எவ்வாறு உணர்த்தியுள்ளார்கள் என்று பார்ப்போம்.

(வளரும்)

---

### தண்டிகைத் திருவிழா

வைகாசி 29 நாள் 11-6 77 சனிக்கிழமை நல்லூர் கந்தசுவாமி கோயில் சங்காபிடேகமும் இரவு தண்டிகை திருவிழாவும் நிகழும்,

### பெருந் திருவிழா

யாழ். வண்ணை. வீரமாகாளியம்மன் கோயில் பெருந்திருவிழா 6-6-77 திங்கள் ஆரம்பமாகிறது.

### கும்பாபிடேகம்

ஊரியவத்தை ஸ்ரீ காளியம்பாள் ஆலய மகா கும்பாபிடேகம் 6 6 77 திங்கட் கிழமை நிகழும்.

### சங்காபிடேகம்

யாழ் வண்ணை ஸ்ரீகாளி தேவி ஆலய மகாசங்காபிடேகம் 7-6-77 செவ்வாய்க் கிழமை நிகழும்.

---

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

இல ஈடு 404
இராஜா குட்டித்தம்பி
கட்டுவன் — வழக்காளி
எதிராக
செல்லத்துரை பத்மநாதனும்
(முன்னைநாள் கிராமசேவகர்)
பெண் அன்னம்மாவும் வசாவிளான் வடக்கு
எதிரிகள்

மல்லாகம் மாவட்டக் கோட்டில் இல. 404 வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1977 ம ஆண்டு யூன் மாதம் 15 ம் திகதி புதன் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால விற்கப்படும்.

தீர்வைத் தொகை ரூபா 6040/- பின் 29-10-74 தொடககம் 3-7-75 வரைக்கும ரூபா 4000க்கு 12வீதம் வட்டியும் பின் முழுத்தொகையும இறுபடும் வரை. 5 வீதவட்டியும் கோட்டுச் செலவு 536/40 இதில் ரூபா 1000/- கொடுபட்டது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக வலிகாமம் வடக்குப் பகுதி செல்லப்பளைக் கோவிற் பற்று கட்டுவன் இறை "விளியிட்டி; பர. நில இலாச்சம் 7 இதில் வடக்குப்பக்கமாக பர நில இலாச்சம் மூன்றரையும் தென்னைகளும பனைகளும் செய்பயிர்களும எல்லை கிழக்கு மயில்வாகனம் வேலு பிள்ளைககும பெண் தங்கம்மாவுக்கும் உரிய ஆதனம், வடக்கு ஒழுங்கை. மேற்கு வழி வாய்க்காலும் ஒழுங்கையும்; தெற்கு வயித்திலிங்கம் செல்லத்துரைக்குரிய ஆதனம். இவ்வெல்லைப்படி இதடங்கலும். இன்னும் தெற்கெல்லையான மிததிக காணியின கிழக்கு எல்லை யோரமாக இரு பகுதியாருக்கும் பொதுப் பாவிப்புக்காக இருக்கும் மூன்றடி அகல வாய்க்காலும இன்னும் இதன் கிழக்கெல்லைக் காணியின் தெற்கெல்லைக் கிணற்றில் இதற்குரிய தண்ணீர்ப் பங்கும் வழமையான வழிப் பாவிப்பும. ஆனால் கிழக்கெல்லை வேலியில் அரைவாசியும் அதில் நிற்கும் பனைகளும் மயில்வாகனம வேலுப்பிளளைக்கும் பெண் தங்கம்மாவுக்கும் உரியது.

இ செ மாரிமுத்து
நீதிமன்றங்களின் விற்பனவு ஆணையாளரும்.
விலைமதிப்பாளரும்,
விதானை வளவு,
சித்தங்கேணி. 2 -6-77
23, 27.5.77

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

நான் அவன் என்று எண்ணினாக்கு நாடும் உளப்உண்டாத(லா ல்
தான்என ஒன்றின்றியே தான் அதுவாய்—நான் எனஒன்று
இல்என்று தானே எனும் அவரைத் தன்னடி வைத்து
இல் என்று, தான் ஆம் இறை.

To those who think of God (worshipping Him objectively as distinct) from themselves, there is the consciousness of the ego (protruding itself). and God is absent (hides himself) from them and appears as the soul (pulling it from behind) Those who efface themselves their egotism) and recognise God as the Puller within; in other words those who dedicate their actions to Him, He merges indistinguishably under His Feet and appears as Himself (as the non dual all-comprehensive Reality) subjectively.

Hindu Organ

Friday, May 27, 1977

## High Watermark of Holy Life

Today is Saint Thirugnanasambandar Guru Poojah, a specially significant religious occasion that keeps us all devotees of the Saiva Faith remembering with solemn gratitude the invaluable embellishment of Saiva Siddhantha performed by this inspired child by chanting the Holy Hymns endearingly known as Thirumurai. The quintessence of that system of religious thought—Saiva Siddhantha — a philosophy popularly acclaimed as the "choicest product of the Dravidian intellect"—is the Thirumurai, the lovely collection of the cream of lyrical poetry in the exquisite Tamil language.

Gurupoojahs of the spiritual teachers of the Saiva Faith, therefore, have a particular reference to the way of living of our people in this land hallowed by holy Hymns. The devotional songs—the Thirumurais—constantly remind us of the intrinsic value of the Saiva Faith and inspire devotees with a yearning for general practice of the tenets of this living creed that is beyond the conception of time.

Precept and practice have always gone hand in hand in the solemn life of the spiritual Teachers. They sang about Thiruneeru and Uruthirakkam — Holy Ash and Holy Bead — always reverentially wearing them themselves, about Temples, incessantly moving on in pilgrimage to spiritual centres and worshipping there, about Dharma, scrupulously maintaining the highest standard of strict ethical conduct.

And at this present time when chaos reigns supreme in the midst of life and confused thinking mars religious discipline, Gurupoojahs should serve as specific occasions for salvaging mankind from the pathetic plight in which it has been placed by irreligious trends.

## A Seminar on the Ground Water Problems of Jaffna

A Team of Scientists from Czechoslovakia who are investigating on the "Geomosphology and Ground Water Problems of the Jaffna Region" had an interesting seminar on this subject at the Jaffna Campus on the 3rd of May, under the auspices of the South Asian Studies Seminar. Prof, W. L. Jeyasingam presided.

### First Woman to seek Parliamentary Forum

It is understood that Mrs. Rebecca Indrapoopathy Gnanasangary has paid her Deposit as a Candidate for the Kilinochchi Seat in the N S. A, in the General Election to be held on July 21, 1977.

If she files Nomination Papers she will win a 'first' as the first woman aspirant to parliamentary honours in the North.

### Regretting the Grim Past

### New Trend in National Politics

The Candidate (Mr. J R. P. Suriyapperuma) who opposed Mrs Srimavo Bandaranaike at the 1970 General Election is now seeking election as the S L F P. Candidate for the Minuwangoda seat in the N S. A. In between these elections he opposed the U. N. P. leader at the Colombo South Bye-election in 1975.

Such regretting the past and seeking pastures anew has become a regular feature during the 1977 General Election.

Whether this is a step for the better or for the worse is not the question. It only shows how flexible is the politician's frame of mind.

### AUCTION SALE

All the unredeemed Jewelleries pawned with Mr A. Sathivadivel, Licensed Pawn Broker of Hospital Road, Kayts till 31-3-76 will be sold by me by Public Auction at the said Pawn Shop on Monday, 20th June 1977 commencing at 9 a m.

V. Erampamoorthy
Licensed Auctioneer

Karainagar
23-4-1977.

### சமயப் பிரசாரம்

சாவகச்சேரி மாவடிப்பிள்ளையார் கோயிலிலும், சங்கத்தானை மீனாட்சியம்பாள் ஆலயத்திலும் திருவிளையாடற் புராண விரிவுரையும் திருத்தொண்டர்புராண விரிவுரையும் சுக்கிரவாரத்தில் நடைபெற்று வருகிறது. சைவப்புலவர் கு. வி, மகாலிங்கம் பிரதி சுக்கிர வாரந்தோறும் இத் தொண்டைச் செய்து வருகிறார். (இ)

### அறிவிப்பு

தவிர்க்க முடியாத காரணங்களினால் சென்ற வார இதழ் வெளிவர முடியாததைப்பற்றி வருந்துகிறோம், — ஆ—ர்.

## Unveiling of the Portrait of a Saiva and Tamil Scholar

Prof. K. Kailasapathy, President of the Jaffna Campus, unveiled the portrait of late Mr S Kandiah, a veteran Saiva and Tamil Scholar from Thenkovai and Editor of "Vittakam" a journal on Saivism and Tamil at the South Asia section of the library in the Jaffna Campus. This portrait was presented by Mr. S. Sivagurunathan, a cousin of Mr. S. Kandiah. Past copies bound) of "Vittakam" and some Ola manuscripts of the scholar too were presented to the library on that occasion. Besides the President, Mr. R. S. Thambiah, Librarian-in-charge and Dr. A Shanmugadas, Lecturer-in-charge, Department of Tamil paid tributes to the work of Mr. S Kandiah.

### Two Lectures by a French Scholar

Dr Mechel Mashere, a French Scholar on Indian religions delivered two interesting lectures at the Jaffna Campus in April, One lecture on "Islam in South East Asia" was delivered under the auspices of the Department of Arabic and Islamic Civilization. The other lecture on "Devotional Trends in the Religions of Sri Lanka" was delivered under the auspices of the Department of History.

### சிதம்பரம் சேக்கிழார் கோயிலிற்

2-ஆம் பக்கத்து வளர்ச்சி

பாடலின் நான்கு அடியும், அறுபத்து மூவர்களை எடுத்துக் காட்டக்கூடிய முறையில் 63 எழுத்துகளே அமைந்திருக்கின்றன என்றும் கூறினர்

விழாவின் தலைவரான பேராசிரியர் திருவாளர் மு. சுந்தரேசம்பிள்ளை அவர்கள் மேலும் பேசுகையில், வாழ்க்கையில் உய்ந்து கரையேற முடியாமல் பெரும் பாதாளத்தில் அழுந்திக் கிடப்பவர்களைக் கரையேற்றக்கூடிய ஞான கருவியாகச் சேக்கிழார் பெருமானின் பெரிய புராணம் (திருத் தொண்டர் புராணம்) சைவர்களின் தவப்பயனுல் கிடைத்துள்ள நூலாகும் என்றும், மேலும் திருத்தொண்டர் புராணம் வாழ்வாங்கு வாழ்வது எப்படி என்பதனை நன்கு விளக்கிக் காட்டக்கூடிய நூலென்றும், தமிழ் நூல்களுள் 9 நூல்களே சிறப்பான நூல்கள் என்று கூறப்படுவதில் திருத்தொண்டர் புராணமும் ஒன்று என்றும். ஆகவே திருத்தொண்டர் புராணம் உயிர்கள் உய்ய வேண்டியதற்கு உரிய நூலாகவும், மெய்ப்பொருள் உண்மைகளை விளக்கக்கூடிய நூலாகவும், வழிபாட்டுக்கு உரிய நூலாகவும் அமைந்திருக்கின்றது; ஆகவே திருத்தொண்டர்களின் வரலாற்றைத் தெய்வீக சேக்கிழார் பெருமான் கலைக் கோயிலாகக் கட்டியுள்ளார் என்றும் கூறினர்.

திருமுறைப் பாராயணத்துடனும் மங்கள இசைகளுடனும் ஸ்ரீ சேக்கிழார் வீதியுலாக் காட்சிஅளித்தார்.

24-ஆம் தேதி 3 ஆவது நாள் விழாவில் மகா வித்துவான மீனுட்சிசுந்தரம்பிள்ளை இயற்றியுள்ள சேக்கிழார் பிள்ளைத் தமிழில் 10 பாடல்களை புலவர் திரு. சுந்தரேசப்பிள்ளை பாடி விளக்கங்களைக் கூறினர். மூத்துக் காண்டவர் அருளிசைச் சங்கத்தின் சார்பாக "சங்கீத பூஷணம்" வரகூர் திரு. அ. க. முத்துக்குமாரசுவாமி அவர்கள் குழுவினர்கள் திருத்தொண்டர்கள்மீது இயற்றியுள்ள கீர்த்தனைகளைப் பாடினர்.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday May 27, 1977.

Editor-in-Chief B. N. Sivapirakasam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org